## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பன்வில பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பன்வில பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் ஹுலு கங்கை காட்சிக்கூடக் கட்டிடம் ரூபா 12,165,075 தொகையில் ரூபா 235,602 இற்கான ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருக்காத பெறுமதி உட்படுத்தப்பட்டிருந்தமையால் கட்டிடங்களின் மீதி ரூபா 235,602 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | விரைவாக சரி செய்யப்படும் என. | விரைவாக அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகையில் நிலையான சொத்துக்கள் தொடர்பான அட்டவணையில் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 64,087,086 இற்கான 19 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி வெவ்வேறாக இனங்காண முடியாமல் இருந்தது. | எதிர் காலத்தில் முறையான பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இன் பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 19(xi) | சபைக்குச் சொந்தமான 9.69 பர்சஸ் இற்கான 7 வெற்றுக் காணிச் சதுரங்கள் அமைச்சரின் அங்கீகாரத்துடன், பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் மற்றும் உடன்படிக்கை மேற்கொள்ளாமல் வெளித்தரப்பினர்களுக்கு பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. | குத்தகைக் காலம் 03 வருடங்களை மிகைத்திருக்கவில்லை என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1952 இன் 06 இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை சட்டங்கள்) சட்டம் | | | |
| | (i) முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பான துணைச்சட்டம் | சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 26 முச்சர வண்டி தரிப்பிடங்களில் இருந்து 2019 முதல் 2023 வரை 198 முச்சக்கர வண்டிகளில் இருந்து ரூபா 675,975 தொகை கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) விளம்பர அறிவித்தல் | 158 விளம்பர அறிவித்தல் பலகைகளிலிருந்து மீளாய்வாண்டின் | நிலுவையை அறவீடு செய்வதற்கு | சட்ட ஏற்பாடுகளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பான துணைச் சட்டம் | போது ரூபா 243,668 தொகை கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | மீளாய்வாண்டு தொடர்பாக காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் கணிப்பீடு மேற்கொள்ளப்படும் என. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | காலம் கடந்துள்ள 04 கடையறை வாடகையாளர்களிடம் ரூபா 490,000 இற்கான வைப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,339,713 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 301,966 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,472,500 | 1,865,341 | 2,105,403 | 888,886 | 2,663,363 | 1,790,807 | 1,838,121 | 1,128,948 |
| ii. | வாடகை | 3,964,920 | 3,076,450 | 1,739,250 | 6,161,900 | 2,631,600 | 2,373,290 | 1,154,160 | 4,824,700 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,719,239 | 1,604,195 | 1,488,004 | 602,809 | 1,926,000 | 1,362,790 | 1,520,667 | 486,618 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 5,072,200 | 6,078,539 | 6,588,050 | 6,610,639 | 5,811,800 | 6,596,636 | 5,703,291 | 7,120,150 |
| | மொத்தம் | 12,228,859 | 12,624,525 | 11,920,707 | 14,264,234 | 13,032,763 | 12,123,523 | 10,216,239 | 13,560,416 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 888,886 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 5,000 ஐ மிகைத்துள்ள 24 வீதவரி அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 190,798 தொகையாக இருந்தது. | அடுத்த வருடத்தினுள் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கான அலுவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் பெறுமான மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இன் படி, வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டிருந்த போதிலும் 2016 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி 2023 ஆண்டிலும் வீதவரி அறவிடப்பட்டது. | அடுத்த வருடம் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| | சபைக்குச் சொந்தமான பொது வர்த்தகக் கட்டிடத் தொகுதியில் 30 கடையறைகளுக்கான கடை வாடகை 2016 ஆண்டு பெறுமதி மதிப்பீடு செய்து 2019 ஆண்டு பெறுமதி மதிப்பீட்டை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் கடையாளர்களினால் நிராகரித்து வாடகை செலுத்துவதை புறக்கணித்திருந்தது. அதன் காரணமாக 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை கூட்டுத்தொகை ரூபா 5,872,250 இற்கான கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியாக நிலுவைத் தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 958,674 தொகை காணப்பட்டதுடன், ஒரு அலகின் நீர்க் கட்டண நிலுவை ரூபா 5,000 ஐ மிகைத்த 82 நீர் நுகர்வு அலகுகளில் இருந்து கூட்டுத்தொகை 656,030 தொகை காணப்பட்டது. | எதிர் காலத்தில் நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை நீர்க்கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 387,247 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,988,000 தொகையாக இருந்தது. | உள்ளூராட்சி திணைக்களத்திடம் கோறிக்கை விடப்பட்டுள்ளது. | நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 03 நீர் செயற்திட்டங்களில் 2023 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் படி ஈ கோலி (E Coli) பற்றீரியா செறிவு மற்றும் கொலிபோம் (Coliform) பற்றீரியா செறிவு சீரற்ற நிலைமையில் காணப்பட்டது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 78(1) இன் படி பொது மக்களின் சுகாதார பொறுப்பாளர் என சபை செயற்பட வேண்டுமென | சுத்தமான நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுத்தமான நீர் வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |

| | | | |
|---|---|---|---|
| | சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக கவனம் செலுத்தாமல் குடிப்பதற்கு பொருத்தமில்லாத அசுத்த நீர் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 93(ஆ) ஏற்பாடுகளின் படி பிரதேசத்திலுள்ள வீடுகளில் மலக் கழிவுப்பொருள் அகற்றுவதற்காக முறைப் பிரகாரம் கிடங்குகளை உரிய காலத்தில் சுத்தம் செய்தல் மற்றும் காலியாக்குவதற்கு முடியுமானவாறு சாக்கடை வண்டிச் சேவையொன்று நடாத்திச் சென்றிருக்கவில்லை. | கொள்வனவு செய்வதற்கு நிதி வலுவொன்று காணப்படவில்லை என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.2 இனங் காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் அட்டவணையில் 22 கணினிகள் காட்டப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக 18 கணினிகள் காணப்பட்டமையால் ரூபா 172,560 இற்கான 04 கணினிகளின் குறைவொன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | பற்றாக்குறையை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டில் 08 பண்ட அலகுகளுக்கான 51 உபகரணங்களுக்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது. | நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நட்டத்தை கணித்து அறவீடு செய்ய வேண்டும். |

**3.3 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 357,075 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 03 வருடத்திற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 36,200 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட காலத்தினுள் பணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

மிகையான காலம் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 17,223 தொகை காணப்பட்டது.

### 3.4 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டின் போது ரூபா 2,000,000 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நக்ல்ஸ் விடுமுறைப் களிப்பிடம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. இந்த கட்டிடம் சுற்றுலாப் பிரயாணிகளின் கவர்ச்சியை பெற்றுக்கொண்டு வருமானம் உழைக்கும் குறிக்கோளுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், குறிக்கோள் சார் கருமத்தை நிறைவேற்றப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் குறை பயன்பாட்டுடன் காணப்படுகின்றது என. | ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு பயன்படுத்த வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 – 2022 ஆண்டுகளின் போது ரூபா 9,586,975 தொகை செலவிடப்பட்டு நக்ல்ஸ் சுற்றுலா நிலையம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியின் உரிமையை சபைக்கு உரித்தாக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்க வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் 2021 ஆண்டின் போது ரூபா 14,000,000 தொகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 13,087,407 இற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு நக்ல்ஸ் சுற்றுலா பிரயாணிகளுக்கான வசதிகள் வழங்கும் நிலையமொன்றில் விருந்து உபசரிப்பு நிலையமொன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்தக்காரரினால் ரூபா 5,866,560 இற்கான | புதிய மதிப்பீடொன்றின் கீழ் நிர்மாணிக்கப்படும் என. | கட்டிடத்தை நிர்மாணித்து பயனுள்ள கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

வேலைப் பகுதியொன்று நிறைவேற்றப்பட்டு 2022 மே 30 திகதி பில் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த காலப் பகுதியில் பில் பத்திரத்திற்கான கொடுப்பனவு செய்யப்படாமையால் ரூபா 7,220,847 இற்கான வேலைப் பகுதி மேற்கொள்ளப்படாமல் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. பின்னர் அமைச்சினால் 2023 மே 29 திகதி ரூபா 4,664,004 தொகை கொடுப்பனவு செய்து கைவிடப்பட்டிருந்த வேலைப் பகுதிகளுக்காக செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 18,365,000 இற்கான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலப் பகுதியில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு வசதி வழங்கப்படாமையால் ரூபா 11,144,153 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது அவற்றில் 07 பதவிகளுக்கான 10 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 05 மிகைகளும் காணப்பட்டது. | வெற்றிடங்கள் தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது எனவும், பதவியணியை கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றது என. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் படி குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஒருவரிடம் மற்றும் 2020 ஆண்டில் இறந்த இரு ஊழியர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 555,919 தொகை கடன் மீதியொன்று காணப்பட்டது. | கடனை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் விதிகளின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நெருங்குவதற்கு மற்றும் சுட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |